Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

29

மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் உறுப்பினர் செயலர் (பொறுப்பு)
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ப.வேல்முருகன்,B.E.,

ந.க.எண் : 383/2018/மதி.2

நாள்: 20.07.18

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப் படுத்துதல் திட்டம், 2017 - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி / மதுரை மாநகராட்சி - சர்வே வார்டு-23, பிளாக் 26, நகரளவு எண்.16/2எ1, 2எ2, 2பி, 3, 4, 5, 6எ, 6பி, 17/2, 3பி, 4 மற்றும் சர்வே வார்டு-22, பிளாக் எண்.2, நகரளவு எண்.2/2, தெற்கு வட்டம், பொன்மேனி கிராமம், சர்வே எண்.177பகுதி, 178/5, 179/2எ, 2பி, 3, 4, 5, 6எ, 6பி, 180/2பி3 மற்றும் மாடக்குளம் கிராமம், சர்வே எண். 294/1-ல் 38242.79 ச.மீ., பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண் 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள் 04.05.2017.
2) அரசாணை எண் 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள் 13.10.2017.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க. எண்.13193/2017/LA2, நாள் 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4) மனுதாரர் திரு. S.சீதாராமன் மற்றும் இருவர், மதுரை அவர்களின் விண்ணப்பம், நாள் 02.02.2018.

உத்தரவு:

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணையின்படியும், பார்வை 3-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை 4-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி, மதுரை மாநகராட்சி, சர்வே வார்டு-23, பிளாக் 26, நகரளவு எண்.16/2எ1, 2எ2, 2பி, 3, 4, 5, 6எ, 6பி, 17/2, 3பி, 4 மற்றும் சர்வே வார்டு-22, பிளாக் எண்.2, நகரளவு எண்.2/2, தெற்கு வட்டம், பொன்மேனி கிராமம், சர்வே எண்.177பகுதி, 178/5, 179/2எ, 2பி, 3, 4, 5, 6எ, 6பி, 180/2பி3 மற்றும் மாடக்குளம் கிராமம், சர்வே எண். 294/1-ல் 38242.79 ச.மீ., பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ ம.உ.தி.கு.எண்.276(R)/2018 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : 38242.79 ச.மீ.

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை : 02

விற்கப்பட்ட மனைகளின் எண்கள்:

32, 33.

30.

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 56.
விற்கப்படாத மனைகளின் எண்கள்:
1-31, 34-46, A1, A2, A3, A4, A5, A6, A7, A8.

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 30802.69 ச.மீ.
திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 3132.70 ச.மீ. (10.17%)

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம் :

1) பரிசீலனை கட்டணம்:

இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம்	1 முதல் 42 வரை ரூ.21,000/- செலுத்தப் பட்டுள்ளது.

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு, அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :

விற்கப்பட்ட மனைகள்

வ. எண்.	மனை எண்கள்.	பரப்பளவு (ச.மீ.)	வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.100/- வீதம்) (ரூபாயில்)	வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.500/- வீதம்) (ரூபாயில்)
1.	32, 33.	--	வரன்முறைப்படுத்த வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுரமீட்டருக்கு ரூ.100/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.	வரன்முறைப்படுத்த வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுரமீட்டருக்கு ரூ.500/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

விற்கப்படாத மனைகள்

வ. எண்.	மனை எண்கள்.	பரப்பளவு (ச.மீ.)	வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.100/- வீதம்) (ரூபாயில்)	வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.500/- வீதம்) (ரூபாயில்)
1.	1-31, 34-46, A1, A2, A3, A4, A5, A6, A7, A8.	--	வரன்முறைப்படுத்த வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுரமீட்டருக்கு ரூ.100/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.	வரன்முறைப்படுத்த வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுரமீட்டருக்கு ரூ.500/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

31

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

0217-Urban Development - 60 - Other Urban Development Scheme – 800. Other Receipts AT Receipts Under Regularisation charges of Unapproved Layouts and Plots -DTCP (DPC:0217-60-800-AT-007)	சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம்.

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

அரசு வழக்கறிஞர் சட்டக் கருத்துருவில் தெரிவித்துள்ளபடி, உத்தேச மனைப்பிரிவு அமையும் இடம் தொடர்பாக, மதுரை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு O.S.No.102/2015 மற்றும் O.S.No.290/2018 ஆகியவற்றின் நீதிமன்ற உத்தரவிற்கு கட்டுப்பட்டதாகும்.

நிபந்தனைகள்:

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக் குழுமம்,
மதுரை.

இணைப்பு
மனைப்பிரிவு வரைபடம் - 2 நகல்கள்.

பெறுநர்
ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

நகல்

1. திரு S.சீத்தாராமன்,
   84, T.P.K.ரோடு,
   ஆண்டாள்புரம்,
   மதுரை - 625 003.

2. திரு A.செல்வராஜ் மற்றும்
   திரு A.அய்யாசாமி,
   27, தானத்தவம் புதூர்,
   மாடக்குளம் போஸ்ட்,
   மதுரை - 625 003.

} மனுதாரர் தகவலுக்காக.

3. உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, மதுரை.
   (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

4. சார்பதிவாளர், பதிவுத்துறை, அரசரடி, மதுரை.
   (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

5. சார்பதிவாளர், பதிவுத்துறை, 4 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
   V.M.R.Complex, வசந்த நகர், பழங்காநத்தம், மதுரை - 625 003.
   மதுரை. (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

6. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு).

28

3

மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டம்) அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை.I.ரெங்கநாதன்,பி.இ.,

மதி1/23370/2018 நாள்: 06.09.2018

பொருள்: வரன்முறைப்படுத்துதல் - மதுரை மாநகராட்சி - மத்திய திட்டம் - சர்வே வார்டு: XXIII - பிளாக் எண்: 26 - நகரளவு எண்: 16/2எ1, 2எ2, 2பி, 3,4,5,6எ, 6பி, 17/2,3பி,4 மற்றும் - சர்வே வார்டு: XXII - பிளாக் எண்: 2 - நகரளவு எண்: 2/2, - பொன்மேனி கிராமம் - சர்வே எண்: 177(P), 178/5, 179/2எ, 2பி, 3, 4, 5, 6எ, 6பி, 180/2பி3 - மாடக்களம் கிராமம் - சர்வே எண்: 294/1 - மனை எண்கள்: **1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, A1, A2, A3, A4, A5, A6, A7, A8**- அனுமதியற்ற குடியிருப்பு மனை வரன் முறைப்படுத்தி - அனுமதி வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை: 1.உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் ந.க.எண்: 383/2018/மதி2, நாள்: 20.07.2018.

2.திரு.S.சீதாராமன் மற்றும் இருவர் ஆகியோரின் மனு நாள்: 03.09.2018.

3.ஆணையாளர் அவர்களின் உத்தரவு மதி1/24784/2017, நாள்: 11.09.2017.

****

மதுரை மாநகராட்சி, சர்வே வார்டு: XXIII - பிளாக் எண்: 26 - நகரளவு எண்: 16/2எ1, 2எ2, 2பி, 3,4,5,6எ, 6பி, 17/2,3பி,4 மற்றும் - சர்வே வார்டு: XXII - பிளாக் எண்: 2 - நகரளவு எண்: 2/2, - பொன்மேனி கிராமம் - சர்வே எண்: 177(P), 178/5, 179/2எ, 2பி, 3, 4, 5, 6எ, 6பி, 180/2பி3 - மாடக்களம் கிராமம் - சர்வே எண்: 294/1-ல் கட்டுப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1-ல் கண்டுள்ள உத்தரவில் நிபந்தனைகளுடன் அனுமதி எண்: ம.வ/ம.உ.தி.கு.எண்: **276(R)/2018** என எண்ணிட்டு வரன் முறை படுத்தி அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை 3-ல் கண்டுள்ள ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி இம்மாநகராட்சியில் மனை எண்கள்: **1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, A1, A2, A3, A4, A5, A6, A7, A8**-க்கு மட்டும் அனுமதி எண்: **276(R)/1/2018** என எண்ணிட்டு மனை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேலும், மேற்படி மனைக்கு பார்வை 1-ல் உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் பொருந்தும்.

<u>கட்டணம் செலுத்திய விபரம்</u>

முறைப்படுத்துதல் கட்டணம்: ₹ 27,22,155/-, சலான் எண்:29/05-09-2018

வளர்ச்சிக் கட்டணம்: ₹ 74,62,275/-, ரசீது எண்: 115/500/1/18-19/0013873/06-09-2018

₹ 61,48,500/-, ரசீது எண்: 115/500/1/18-19/0013874/06-09-2018

06/09/18

செயற்பொறியாளர்(திட்டம்)

மதுரை மாநகராட்சி

பெறுநர்: திரு.S.சீதாராமன் மற்றும் இருவர்,
84, T.P.K.ரோடு, ஆண்டாள்புரம்,
மதுரை.

6.9.18

நகல்: உறுப்பினர் செயலர்,
மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை.

திட்டப்பிரிவு அலுவலகம்
21 APR 2022
மதுரை மாநகராட்சி

86

நகர் ஊரமைப்புத்துறை

★மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம்,

மதுரை உள்ளூர் திட்டக்குழுமப்பகுதி,

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்- திரு.அ.விஜயன், பி.இ.,

ந.க.எண் : 4894/2021/மதி.2 நாள்: 03.2022

கட்டிட தி.அ.எண் : 50அ/2022 முதல் 50இ/2022.

உள்ளாட்சியின் பெயர் : மதுரை மாநகராட்சி

பொருள் : Residential Non High Rise Building (Apartment) - மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் - மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், மதுரை மாநகராட்சி, பொன்மேனி கிராமம், சர்வே எண். 178/5,179/2Apart, 4, தற்போதைய புல எண்கள் வார்டு 23, பிளாக் 26, நகரளவு எண்கள் 16/5,2A2,15/7-ல் கட்டுப்படும் மற்றும் இத்துறையால் வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ./ம.உ.தி.கு.எண் 276(R)/2018 ல் அமையும் மனை எண்கள். 36, 37, 38, 39 ஆகிய மூன்றினை ஒன்றிணைத்து, 1159.25சமீ பரப்பளவு இடத்தில் Stilt + 04 Floors கொண்ட 24 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49 ன் கீழ் திட்ட அனுமதி எண்: 50அ/2022 முதல் 50இ/2022– என எண்ணிட்டு திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1) மனுதாரர் திரு.சீத்தாராமன், விஸ்வாஸ் புரோமட்டர்ஸ் அவர்களின் விண்ணப்பம் நாள் 14.12.2021, 28.01.2022, மற்றும் 01.03.2022.
2) உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4894/2021/மதி.2 நாள் . 28.12.2021, 25.02.2022.
3) அரசாணை எண்(நிலை) எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.28.03.2012.
4) அரசாணை எண்(நிலை) எண்.85, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.16.05.2017.
5) அரசாணை எண்(நிலை) எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
6) அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
7) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.

8) அரசாணை எண். 31 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 31.01.2020

9) அரசாணை எண். 54 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 12.03.2020

10) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009, பிஏ2, நாள்.16.04.2009.

11) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள்.27.06.2012.

12) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/ பிஏ1 நாள் 22.09.2017

13) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14227/2017/ சிபி நாள் 14.12.2017

14) அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 29.11.2018 (Insisting TNRERA Registration)

15) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019/பிஏ2 நாள் 06.11.2019 மற்றும் 14.08.2021.

16) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 8557/2019/GR, நாள் 08.05.2019.

17) அரசு கடிதம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-09,அவர்களின் கடிதம் எண்.8449/நவ4(3) /2020-2, நாள்.-23.09.2020.

18) நகர் ஊரமைப்பு இயக்குநர்(மு.கூ,பொ) சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-7671/2020/T(2) நாள்-25.09.2020.

19) அரசாணை எண்(நிலை) எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.14.08.2021.

20) மதுரை உள்ளூர் திட்டக் குழுமத் தீர்மானம் எண். 130, நாள். 29.09.2020 மற்றும் தீர்மான எண். 49, நாள். 04.09.2021.

உத்திரவு :

மதுரை உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி, மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், மதுரை மாநகராட்சி, பொன்மேனி கிராமம், சர்வே எண். 178/5,179/2Apart, 4, தற்போதைய புல எண்கள் வார்டு 23, பிளாக் 26, நகரளவு எண்கள் 16/5,2A2,15/7-ல் கட்டுப்படும் மற்றும் இத்துறையால் வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ./ம.உ.தி.கு.எண் 276(R)/2018 ல் அமையும் மனை எண்கள். 36, 37, 38, 39 ஆகிய மூன்றினை ஒன்றிணைத்து, 1159.25சமீ பரப்பளவு இடத்தில் Stilt + 04 Floors கொண்ட 24 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு கட்டுமான மனைக்கு 'A to F' என எல்லையிட்டு ம.வ./ம.உ.தி.கு.எண்.48/2022 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலுடன், அம்மனையில்,

கட்டிட விபரம்

வ.எண்	தளவிபரம்	FSI Sq.M.	Non FSI Sq.M.	Total Area Sq.M.
1)	Stilt Floor	24.95	559.51	584.46
2)	First Floor	555.12	---	555.12
3)	Second Floor	555.12	---	555.12
4)	Third Floor	555.12	---	555.12
5)	Fourth Floor	555.12	---	555.12
6)	Terrace Floor	---	18.12	18.12
	Total Built up Area	**2245.43**	**577.63**	**2823.06**

Car Parking required	--	26 Nos	
Car Parking provided	--	27 Nos	
Allowable FSI	--	2.00	
Achieved FSI	--	1.937	
OSR	--	உத்தேசம் அமையும் இடமானது ஏற்கெனவே ஒப்புதல் வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் அமைவதால், கேள்வி எழவில்லை.	
Unit I	--	86.76 Sq.m	
Unit II	--	85.64 Sq.m	
Unit III	--	86.10 Sq.m	
Unit IV	--	86.59 Sq.m	
Unit V	--	83.05 Sq.m	
Unit VI	--	85.40 Sq.m	

மேற்கண்டவாறு பரப்பளவு கொண்ட , 24 குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49 ன் கீழ் திட்ட அனுமதி எண். 50அ/2022 முதல் 50இ/2022என எண்ணிட்டு 04.03.2022 முதல் 03.03.2027 வரை ஐந்து (5) வருட காலத்திற்கு கீழ்காணும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நிலஉரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்

(கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set back) வாகன நிறுத்தம் போன்ற விபரங்கள் அறிவிப்பு பலகை நிறுவப்பட வேண்டும்.

3) It is the responsibility of the builders /developers / land owners to ensure the safe bearing capacity of the soil and adequacy of the foundation.

4) " Planning Permission is issued in accordance with the Provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural Stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. However Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction".

5) பார்வை 7-ல் காண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி Quarterly submission of Certificate by the owner / developer to the Local Body regarding execution of work மற்றும் Completion Certificate தொடர்பாக இணைப்பில் கண்டுள்ள சான்றுகள் பெற்று கட்டிடத்தின் உறுதித்தன்மையை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

6) பார்வை 6,7,8-ல் கண்ட அரசாணையின்படி கட்டுமானம், Plinth level அடைந்தவுடன் தொடர் கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு முன், Construction Continuance Certificate பெறுவதற்கு மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டுமானப் பணி தொடர்ந்திட வேண்டும். மேலும், கட்டுமானப் பணி முழு வடிவில் முடிந்த பின்னர் பணி முடிவு சான்று (Completion Certificate) பெறப்பட வேண்டும். இச்சான்று பெறப்பட்ட பின் தான் வழக்கமான பயன்பாட்டு இணைப்புகள் (Regular Utility Connection) பெற இயலும்.

7) The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real

Estate project or part of it only after registering the real estate Project with the Real Estate Regulatory Authority".

8) பார்வை -ல் காணும் இவ்வலுவலக சுற்றறிற்கையின்படி மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை வழக்கு WP(MD).No.8948 of 2019 WMP(MD)No.6912 and 6913 of 2019 உத்தரவு நாள். 12.4.2019 நீதி மன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள, "This order is passed subject to the outcome of the Writ Petition W.P.(MD).No. 8948/2019என நிபந்தனையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1) உத்தேச வணிக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்படல் வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண் : 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 04.02.2019–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண் : 341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் : 03.11.04–ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) மேலும் இந்த திட்ட அனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

13) பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)-ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64 (1)-ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/ அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

14) உதவி இயக்குநர்/ மதுரை உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திட்டஅனுமதி அளித்தபிறகு

1.திட்டஅனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,

2.சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைப்பிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

15) The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

16) கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

17) திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி, அவர்கள் விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

18) மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

19) வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு – வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20) கீழ்கண்ட கட்டணம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே வசூலிக்கப்பட வேண்டும்.

(i)Collect 1% as contribution to the manual workers general welfare fund at the time of plan approval.

(ii)Incorporate a clause or condition in building permit proceedings that 'getting registration certificate under section 7 of building and other construction workers (Regulation of employment and conditions of service) Act, 1996, from the Directorate of Industrial safety and health is mandatory'

(iii)To mark a copy of such plan approval proceedings to concerned officials of Directorate of Industrial safety and Health.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்று அனுப்புமாறு ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
மதுரை மாவட்டம்

இணைப்பு
செயலாணை கடிதம் - 2 நகல்
முத்திரையிட்ட வரைபடம் - 2 தொகுப்பு

1.பெறுநர்
ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி
மதுரை.

2.நகல்(உள்ளாட்சி வழியாக) (பத்தி ஒன்று மட்டும்)
மனுதாரர் முகவரி
திரு.சீத்தாராமன்,
Managing Director, Visvas Promoters (P) Ltd.,
84, TPK Road, Andalpuram,
Madurai - 03

செயலாணை கடிதம் (ம)
முத்திரையிட்ட வரைபடம்

3.தொழில்நுட்ப வைப்பறை -

4)தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை
ஒழுங்குமுறை குழுமம், (TNRERA)

1A, முதல் தளம், காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை,
எழும்பூர், சென்னை -600008.

உத்தரவு கடிதம் மற்றும்
வரைபடம் ஒரு தொகுப்பு

உள்ளூர் திட்டக் குழுமம், மதுரை மாநகராட்சி
திட்ட அனுமதி உத்தரவு
(பிரவு 49, நகர் ஊரமைப்பு சட்டம் 1971)

9D

கட்டிட விண்ணப்ப எண் : 115/CP/21-22/0065156 நாள்:14-Apr-2022

பி.ஏ எண் : 115/BPA/2022/01273

கட்டிட அனுமதி எண் : 115/BL/2022/01283

திட்ட அனுமதி எண் : Z1/0318/2022

மனுதாரர் பெயர் : திரு சீத்தாராமன் எஸ்

முகவரி : T S NO16/5,தானத்தவம், பொன்மேனி, ZONE-1

மனுவின் நாள் : 14-Mar-2022

நில / கட்டிட விளக்கம் : கட்டிடம் /கூடுதல் கட்டிடம் /புதுப்பித்து கட்டிக்கொள்ள

தொகுதி : XXIII பகுதி : 26

கதவுமனை எண் : 36,37,38,39 நகரளவுஎண் : 15/7 PT, 16/5 PT,16/2A1 PT,

தெரு : தானத்தவம்

அபிவிருத்திக் கட்டணம் : செலான் நெ: 115/CP/22-23/0003230 நாள் : 13-Apr-2022

கட்டணம்: 74200.00

முழுமைத்திட்டத்தில் கண்டுள்ள கட்டுபாட்டுக்குட்பட்டு, மேற் காணும் நகரளவு எண் 15/7 PT, 16/5 PT,16/2A1 PT,, தானத்தவம், பொன்மேனி, ZONE-1 தெருவில் கட்டிடம் கட்டிக் கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைபேரில் 14-Apr-2022 முதல் 13-Apr-2027 வரை ஐந்து ஆண்டு காலத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனை:

(1) உள்ளூர் திட்டக் குழுமத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வு உத்தரவுப்படி திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

(2) இந்த திட்ட அனுமதி தவறான தகவல்கள் பேரில் வழங்கப்பட்டிருந்தால் அதை தள்ளுபடி செய்யவோ, நிறுத்தி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உள்ளது.

P. Subbu Thai

பெறுபவர்,

சீத்தாராமன் எஸ்
T S NO16/5,தானத்தவம், பொன்மேனி, ZONE-1

உதவி செயற்பொறியாளர்
(திட்டம்)
மதுரை மாநகராட்சி
ZONE-1

MADURAI CITY MUNICIPAL CORPORATION

This Order is electronically generated and does not require signature



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate